சுருக்கம்

தொழில் – சர்க்கரைத் துறை – கள்ளக்குறிச்சி–II மற்றும் தர்மபுரி சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் வடிப்பகத்துடன் கூடிய எத்தனால் ஆலைகள் அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழில் (எம்.ஐ.சி.1) துறை

அரசாணை (நிலை) எண். 97

நாள் : 31.07.2014
ஜய, ஆடி – 15,
திருவள்ளுவர் ஆண்டு 2045

ஆணை :

24.07.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட தொழில் வளர்ச்சித் திட்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:

"சர்க்கரை ஆலைகளை ஊக்குவிக்கும் விதமாக, கள்ளக்குறிச்சி–II மற்றும் தர்மபுரி சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில், தலா 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 45 கிலோ லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட வடிப்பகத்துடன் கூடிய எத்தனால் ஆலைகள் அமைக்கப்படும். இதன் மூலம் அந்த பகுதியில் உற்பத்தி செய்யப்படும் கரும்புப் பயிர் முழுமையாக பயன்படுத்தப்படும். கரும்பு கசண்டு மதிப்பு கூட்டப்பட்டு, எத்தனால் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எரிசாராயம் தயாரிக்கப்பட்டு ஆலைக்கு அதிக வருவாயும், லாபம் ஈட்டும் வாய்ப்பும் அதிகரிக்கும். இத்திட்டத்திற்குத் தேவைப்படும் 180 கோடி ரூபாயில், 50 சதவீதம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மூலமும், 40 சதவீதம் சர்க்கரை வளர்ச்சி நிதியிலிருந்தும், 10 சதவீதம் பங்கு மூலதனத்தின் மூலமும் ஈடு செய்யப்படும்".

2) மேற்காணும் திட்டத்தினை குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் மற்றும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறும் சர்க்கரைத் துறை இயக்குநரை அரசு பணிக்கிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ச.வி. சங்கர்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
சர்க்கரைத் துறை இயக்குநர்,
690, அண்ணா சாலை, நந்தனம், சென்னை – 600 035.

நகல்
சிறப்புத் திட்டங்கள் அமலாக்கத் துறை, சென்னை–9.
தொழில் (அநமு2.1/வசெதி1) துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ப. கலைச்செல்வி
பிரிவு அலுவலர் 31/7/2014

31/7/2014